## மது வரி வெகுமதி நிதியம் - 2017

---

இலங்கை மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1912 இன் 8 ஆம் இலக்க மது வரி கட்டளைச் சட்டத்தின் 58 ஏ பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 1994 மார்ச் 4 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 1(iii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிகிகூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளக கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மது வரி திணைக்களத்தின் மது வரி வெகுமதி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### அ. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1

(i) மீளாய்வு வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கையின் குறிப்பு இலக்கம் 2.1 இன் பிரகாரம் கணக்குகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருப்பினும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இற்கு முரணாக வெகுமதி நிதிய கணக்கு காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) திறைசேரி கணக்கில் உள்ள ரூபா 44,185,902 பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியம் குறுங்கால அசையாத சொத்தாக இருந்த போதிலும், நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறைச் சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### ஆ. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7

(i) நிதி நிலைமைக்கூற்றில் காணி கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 47,134,000 பெறுமதியான கட்டிடம் கணக்காய்வு திகதியான 23 மார்ச் 2018 வரை மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. கட்டிடங்களுக்கான பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு உரிய சீராக்கங்கள் மீளாய்வு ஆண்டுவரை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலையான சொத்துக்களிற்கான பெறுமானதேய்வு நியமத்தின் 64 ஆம் பிரிவிற்கு அமைய சொத்தின் பயனுள்ள ஆயுட்காலத்தை கருத்தில் கொள்ளாது கணிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு வருடத்தில் மொத்த கட்டண பெறுகையில் 15 சதவீதமான ரூபா 19,360,812, திரட்டு நிதியதிற்கு செலவு வைக்கப்படவேண்டியிருந்த போதிலும் அதற்காக ரூபா 17,117,924 மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக மேலும் செலவு வைக்கவேண்டிய ரூபா 2,242,888 தொகைக்கு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெகுமதி நிதியத்திற்கு 2017 திசெம்பர் மாதத்திற்கு கிடைக்கப்பெற்ற ரூபா 22,288,232 மொத்த தண்டப்பண பெறுமதி மற்றும் ரூபா 1,645,800 சிகரட் குற்ற பணம் திணைக்களத்தின் வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் மொத்த தொகை ரூபா 23,934,032 மீளாய்வு வருடத்தின் வெகுமதி நிதிய கணக்கிலிருந்து விடுபட்டிருந்தது.

### 2.2.3 விவரிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதுவரி வெகுமதி பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் முறையே ரூபா 129,072,077 மற்றும் ரூபா 104,720,340 ஆக காட்டப்பட்டுள்ளது. கணணி அறிக்கைகளின் பிரகாரம் அவை முறையே ரூபா 157,387,736 மற்றும் ரூ.107,865,650 ஆக காட்டப்பட்டுள்ளது. ரூபா 28,315,659 மற்றும் ரூபா 3,145,310 வேறுபாட்டிற்கான காரணங்கள் விவரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறுள்ளன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 454(1) | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொது படிவம் 44 இல் ரூபா 38,810,560 கிரயமான தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் தொடர்பில் இருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் ஐஎன்ஐ/2002/02 | கணணி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்து பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 25,957,781 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்கான மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதியத்திற்கு சொந்தமாக காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ள ரூபா 47,134,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாகவும் ஆவணங்களுக்குட்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

---

### 3.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வு ஆண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 28,646,537 மிகையாக இருந்ததுடன் இதற்கு ஒப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,263,375 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,616,838 தொகையான குறைவொன்றினைக் காட்டியது. இணக்க கட்டணப் பெறுவனவுகள் ரூபா 4,428,563 ஆல் அதாவது 3 சதவீதத்தினால் குறைவடைந்தமை இம்மிகையில் குறைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---

### 4.1 செயலாற்றல்

---

1994 மார்ச் 04 ஆம் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவுறுத்தலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்ட வெகுமதி நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறுள்ளன.

- மதுவரி உத்தியோகத்தர்கள், தகவல் வழங்குனர்கள் மற்றும் ஏனையோருக்கு வெகுமதித் தொகை செலுத்துதல்.

- பயிற்சியளித்தல் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு பணம் வழங்குதல்.

- ஆண்டிற்கு ரூபா 50,000 எல்லையின் கீழ் மதுவரித் திணைக்களத்தின் பதவியணியினரின் விளையாட்டு, களியாட்ட மற்றும் நலன்புரி வேலைகளுக்கு பணம் வழங்குதல்.

- மது வரித் திணைக்களத்திற்கு தேவையான பொருட்கள், உபகரணங்கள் கொள்வனவு செய்தல்.

- பாராட்டக்கூடிய வேலைகள், துணிச்சலான செயற்பாடுகள் அல்லது விஷேட ஏற்றுக்கொள்ளல் போன்ற வேறு செயற்பாடுகளுக்கும் வெகுமதிப் பணம் வழங்குதல்.

- விஷேட கடமைகள் அல்லது விஷேட சுற்றி வளைப்புக்களுக்காக பிரதேசங்களில் சுற்றி வளைப்புக்களில் ஆளணியினரை ஈடுபடுத்தும் போது திணைக்களத்திற்கு ஏற்படும் செலவினங்களைத் தீர்த்தல்.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) உத்தியோகத்தர்களின் பயிற்சி, கல்வி நடவடிக்கைகளுக்காக ரூபா 2,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இதற்கான திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாது அத்தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்குதொகையில் 52 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தின் நோக்கமான பாராட்டக்கூடிய செயற்பாடுகள், நேர்மையான செயற்பாடுகள் அல்லது விஷேட ஏற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 200,000 பணமும் விளையாட்டு, களியாட்டம் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 50,000 பணமும் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஒதுக்கீடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்கள் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருந்ததாக அவதானிக்கப்படவில்லை.

(இ) மது வரி தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளில் குறைவுகள் முறையே 1101, 387, 339 மற்றும் 278 ஆக இருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது 48 புதிய மது வரி பரிசோதகர்கள் மற்றும் 92 மது வரி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்படவில்லை.

(ஈ) மது வரி சுற்றறிக்கை இலக்கம் 03/2011 இற்கு அமைவாக தொழில்நுட்ப குற்றங்கள் தொடர்பாக தண்டப்பணம் அறவிடுதல் மேற்கொள்ளப்படுதலுக்கு அமைய மீளாய்வு வருடத்தின் மொத்த சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கையில் 79 சதவீதம் சாதாரண குற்றங்கள் தொடர்பாகவும் 21 சதவீதம் மாத்திரம் பிரதான நிபந்தனைகளை மீறுதல் தொடர்பாக குறைவான அளவிலும் காணப்படுகின்றது. எனவே பிரதான நிபந்தனைகளை மீறுதல் சுற்றிவளைப்புக்களில் கூடிய கவனம் செலுத்தப்படவில்லை என கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்டது.

(உ) தொழில்நுட்ப குற்றங்களின் பொருட்டு பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்பு தொகையாக வெகுமதி வழங்கப்படுதல் இந்நிதியத்தின் நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வு வருடத்திலும் கடந்த இரு வருடங்களிலும் 25 ஆன குறைவான சதவீதம் சுற்றிவளைப்புக்களில் நேரடியாக பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கும் 39 சதவீதம் நேரடியாக பங்குபற்றாத உத்தியோகத்தர்களுக்கும் வெகுமதி செலுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) வருடாந்த பெறுவனவுகளில் 15 சதவீதம் திரட்டுநிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியும், 10 சதவீதம் நிதியத்திற்கென நிறுத்தி வைக்கப்பட வேண்டியும் காணப்படுகின்றது. மிகுதி 75 சதவீதத்தில் 10 சதவீதம் தகவல் வழங்குனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வு வருடத்திலும் கடந்த மூன்று வருடங்களிலும் தகவல் வழங்குனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படவில்லை.

(எ) பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் மீதிகளில் வழக்கமான அதிகரிப்பு மீளாய்வு வருடத்திலும் அதற்கு முன்னைய மூன்று வருடங்களிலும் காணப்படுகின்றது. நிதிய ஸ்தாபிப்பின் நோக்கமான திணைக்கள உத்தியோகத்தர்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்திதிறனை அதிகரித்தல் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

| வருடம் | 31 திசெம்பர் மீதி (ரூபா) |
| --- | --- |
| 2017 | 388,502,891 |
| 2016 | 362,998,739 |
| 2015 | 330,559,626 |
| 2014 | 258,943,440 |

(ஏ) 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவு (அ) (i) மற்றும் (ii) இற்கு அமைய புகையிலை வெகுமதி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு அறவிடப்படும் தண்டப்பணங்களில் 25 சதவீதம் புகையிலை வெகுமதி நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான நிதியம் ஒன்று 31 திசெம்பர் 2017 வரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட வெகுமதி நிதியத்திலிருந்து மதுவரி உத்தியோகத்தர்களுக்கும், தகவல் வழங்குனர்களுக்கும், ஏனைய தரப்பினர்களுக்கும் வெகுமதி வழங்குவதற்காக எழுத்துமூல நடைமுறையொன்று 31 திசெம்பர் 2017 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 மார்ச் 4 ஆம் திகதிய மதுவரி அறிவித்தல் இலக்கம் 818 இன் படி வருடாந்த இணக்க கட்டண பெறுவனவுகளில் 10 சதவீதம் வெகுமதி நிதிய நடவடிக்கைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட வேண்டிய போதிலும் நிறுத்தி வைக்கப்பட்ட மொத்த தொகையில் 47 சதவீதத்திற்கும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளமை முன்னைய ஆண்டுகளின் தரவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது.

(இ) நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்விற்கு சமனான தொகை திறைசேரியில் பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் 31 திசெம்பர் 2017 இல் ரூபா 44,185,902 காணப்பட்டது. பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளுக்கு இந்நிதியத்தை பயன்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 221,524 பெறுமதியான நூலக பத்தகங்கள் 5 வருடங்களிற்கு மேலாக குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

07 செலவின விடயங்களுக்குரிய பாதிடப்பட்ட எண்ணிக்கைக்கும் உள்ளபடியான எண்ணிக்கைக்கும் இடையே 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது மது வரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் புத்தகங்களின் பராமரிப்பு என்பவை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைய காணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | - | முறையாக பதிவேடுகள் பேணப்படாமை மற்றும் மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| (இ) | நிதியத்தின் முகாமைத்துவம் | - | மதுவரி அறிவித்தல் 818 இன் பிரகாரம் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |